நிதிநிலைமைக்கேற்றவாறு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிரிசமுத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த தொடர்ந்து கோரிக்கை விடுப்பதால், மேலே தெரிவித்துள்ள அரசின் நெறிமுறைகளை அங்கு பூர்த்தி செய்யுமானதால், அரசின் நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நடப்பு ஆண்டிலேயே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய அத்தனை நிபந்தனைகளும் இதற்குப் பொருந்துகின்றது. அதுமட்டுமல்ல, கடந்த 3 ஆண்டுகளிலே ஓர் அரசு உயர்நிலைப் பள்ளிகூட மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்படவில்லை. (குறுக்கீடு) இந்த ஆண்டு அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணிதரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

132—

பாலம் கட்டுதல்

***27708—திரு. எஸ்.எஸ். ரமணிதரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதி மணியாச்சி ஓடையில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 14]

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதி மணியாச்சி ஓடைப் பகுதி காப்புக் காட்டில் அமைந்துள்ளது. வன நிலத்தில் பாலம் கட்டுவதற்கு பழங்குடியினர் மற்றும் இதர மரபு வழி வன வாழ்வினர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006-ன்படி, 10-4-2013 அன்று ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு, வனத் துறை அனுமதி வழங்கியுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு ரூ.10 கோடி நிதியினை இதற்கு ஒதுக்கி, இப்போது பாலத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தான சாதனைகளின் இமய நாயகி எங்கள் அம்மா; தமிழக மக்களின் இதயத்தை வென்ற வரலாற்றுத் தலைவி எங்கள் அம்மா; மூன்றாண்டு ஆட்சியில் உலகம் வியந்த, ஒப்பற்ற சாதனைகளைப் புரிந்த சாதனைத் தலைவி எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) வியப்பே வியந்துப் போற்றும் வித்தைத் தலைவி எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா அவையில் எடுத்துக்கொள்வதற்கு முன்பே பர்கூர் மலைப் பகுதி மக்களின் 40 ஆண்டுக்கால கனவாக இருந்த மணியாச்சி ஓடையில், பாலம் கட்ட உத்தரவு வழங்கி, அதற்கு நிதியும் ஒதுக்கி, பாலம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. அதற்காக மிகப் பெரிய வரலாற்றை உருவாக்கிக் காட்டிய எங்கள் வரலாற்றுப் பொக்கிஷம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானு கோடி நன்றிகளைச் சமர்ப்பித்து அமர்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)